1972 மார்ச் 15]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஏற்கெனவே உள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் மார்ச் மாதம் முடிவடைய இருக்கிறது. அடுத்த பதவி காலத்திற்கு உறுப்பினர்கள் இதிலே அங்கம் வகிப்பதற்கு உரிமை இருக்கிறது. ஆகவே, விரைவிலே இதுபற்றி அரசாங்கம் முடிவு எடுக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மகாராஜாவினுல் நியமிக்கப்பட்ட இந்த உறுப்பினர் தொடர்ந்து எத்தனை ஆண்டுகளாக இருந்து வருகிருர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்த மூன்று ஆண்டு காலமாக தொடர்ந்து இருந்து வருகிருர்.

திரு. நா. வீராசாமி: மன்னர் மானிய ஒழிப்பு சட்டப்படி மகாராஜக்களின் உரிமைகள் ஒழிக்கப்பட்டுவிட்டன. இப்பொழுது மகாராஜா நியமிக்கின்ருர்களா, அல்லது இந்த அரசாங்கம் நியமித்துக் கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மகாராஜா சிபாரிசு செய்கின்ற உறுப்பினரைத்தான் நியமித்துக்கொண்டிருக்கிருேம். மன்னர்களின் உரிமைகள் ஒழிக்கப்பட்டு விட்ட காரணத்திஞல், இதுவும் ஒழிக்கப்படவேண்டும் என்றுதான் சட்டப்படி ஒழிக்கப்படுவதற்கு நடைமுறையில் இடம் இருக்கிறதா, விதிமுறையில் இடம் இருக்கிறதா என்பதை நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிருேம்.

Board of Education

* 496 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the executive board of the Tamil Nadu Asiriar Sangam requested the Government on 9th May 1971 to constitute an antonomus Board of Education with representatives of teachers Association and to formulate and maintain standard curriculum and supervise the working of schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மே 9-ம் தேதியன்று தமிழ்நாடு ஆசிரியர்கள் சங்கம் கேட்டுக்கொண்டார்களே, ஒரு அடானமஸ் போர்டு அமைக்கவேண்டுமென்று, அதற்கு அரசாங்கத்தினுடைய பதில் என்ன, அரசு என்ன முடிவு செய்திருக்கிருர்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1971-ம் ஆண்டு மே 9-ம் நாளன்று நடந்த கூட்டத்தில் ஆசிரியர் கழகக் குழுவினர் இப்படிப்பட்ட ஒரு யோசனையைத் தெரிவித்தார்கள். மாநிலப் பள்ளி கல்வி வாரியம் அமைத்தால் சரியாக இருக்குமா என்று பல வகைகளில் பரிசீலனை செய்து பார்த்ததில் அரசாங்கத் துறையில் இருப்பதுபோல் அத்தகைய நன்மைகள் ஏற்படாது என்ற காரணத்தினால், இப்பொழுது இருக்கிற முறையே பொருத்தமானது என்று அரசு கருதுகிறது. காரணம், சாதாரணமாக இப்படிப்பட்ட வாரியங்கள் வாணிப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகின்றன. டிரான்ஸ்போர்ட் வாரியம், மின்சார வாரியம் போன்றவைகளை வாரியமாக அமைத்து, அதற்கென்று ஒரு தனிக் குழு அமைத்து நடத்துவது நல்லது. கல்வி போன்ற துறையில் அதற்கென்று ஒரு வாரியம் அமைத்தால், இந்த அரசு என்ன செய்யவேண்டியிருக்குமென்றால், மானியத் தொகையை வாரியத் திடம் கொடுத்து விட்டு, அந்த வாரியம் கல்விக்கான பொறுப்புக்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டியிருக்கும். அரசுக்கு அதில் அதிகமான தொடர்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். கல்வி வளர்ச்சித் துறையாக இருக்கிற காரணத்தினால் பொதுமக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சட்டமன்றத் தின் முழுக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு அரசுத் துறையினாலேயே இயக்கப்பட வேண்டுமென்பதுதான் கருத்து. வேறு எல்லா மாநிலங்களிலும் அரசுத் துறைதான் கல்வித் துறையை இயக்கி வருகிற காரணத்தினாலும், இதற்காக ஒரு வாரியம் அமைப்பது அவ்வளவு பயன்படாது என்ற கருத்தைத்தான் அரசு கொண்டிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன்: தற்பொழுது முறைப்படி இந்தக் குழுவில் ஆசிரி யர்கள் இடம் பெறுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது அரசாங்கத்தினிடம் தான் இந்தத் துறை இருப்பதால் ஆசிரியர்கள் இடம் பெற இடமில்லை.

ஏழை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் விநியோகம்

*497 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏழை மாணவர்கட்கு இலவசமாக புத்தகங்களை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தமிழ் நாட்டில் உள்ள அங்கீகரிக் கப்பட்ட துவக்கப்பள்ளிகளில் 1 முதல் 3 வகுப்புவரை படித்து மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உணவு பெறும் ஏழை மாணவ மாணவிகளுக்குப்